
SRI LANKA:
இலங்கை : இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயல்திட்டம்
HRDAG
இலங்கையில் யுத்தம் 2009 இல் முடிவுக்கு வந்து ஒரு சதாப்தம்
கடந்துள்ள நிலையிலும் யுத்தத்தால் கொல்லப்பட்டவர்களின்
முழுமையான எண்ணிக்கையோ பெயர் பட்டியலோ
பார்டமும் இல்லை. இதனால் இறந்தவர்களின்
பெயர்களை சேகரிக்கவும்
இறுதி எண்ணிக்கையை மதிப்பீடு
COUNTING THE DEAD
COUNTING THE DEAD




வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு நாளில் இலண்டனில் நடைபெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இலங்கைப்போரில் இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப்போர் 2009 ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்த நிலையிலும் இன்றுவரை யுத்தத்தால் கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரங்களோ பட்டியலோ யாரிடமும் இல்லை. இதனால் இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயற்திட்டத்தை சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டத்திற்கான அமைப்பு (ITJP) மற்றும் மனித உரிமைகள் தரவு ஆய்வுக்குழு (HRDAG) ஆகிய அமைப்புகள் இணைந்து முன்னெடுத்துவருகின்றன.

இந்நிலையிலேயே, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான சர்வதேச நாளை நினைவு கூரும் வகையிலும்இ இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி வடக்குஇ கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கிலும் பிரித்தானியாவில் உள்ள பெரும்பாலான தமிழ் அமைப்புக்களும் ஒன்றிணைந்து

இலண்டன் சதுக்கத்தில் (Trafalgar Square) நேற்றையதினம் நடத்திய மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் இறந்தவர்களை கணக்கெடுக்கும் செயல்த்திட்டம் செயற்பாட்டாளர்களால் முன்னெடுக்கப்பட்டது.

பிரதான செயற்பாட்டாளர் மநுமயூரன் கிருபானந்த மநுநீதி அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி கணக்கெடுக்கும் பணியில் செயற்பாட்டாளர்களான தங்கவேலாயுதம் வானுசன், தனபாலசிங்கம் பிரதீபா, சாருப்பிரியன் சிறீஸ்கரன், பிரசன்னா பாலசந்த்திரன், விஜய் விவேகானந்தன், சசிகரன் செல்வசுந்தரம் நிலக்ஜன் சிவலிங்கம், அஜிபன் ராஜ் ஜேயெந்திரன், நிதர்சன் தவராசா ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோரிடமிருந்து யுத்தத்தினால் இறந்த அவர்களின் உறவுகளின் பெயர் விபரங்களை சேகரித்தனர்.

இந்நிலையில் மேற்படி செயற்திட்டம் குறித்து கருத்து தெரிவித்த செயற்பாட்டாளர்கள் இலங்கையில் இடைக்கால நீதிப்பொறிமுறை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி என்பவற்றிற்கு மிகவும் அத்தியவசியமாக இந்த பணி இருக்கின்றமையால் மிகுந்த ஆர்வத்துடன் இந்த பணியில் முன்வந்து ஈடுபடுவதுடன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குரலுக்கு நாமும் வலுச்சேர்க்கின்றோம் என தெரிவித்தனர்.

மேலதிக விபரங்களிற்கு இங்கே அழுத்தவும்




COUNTING
THE DEAD


COUNTING
THE DEAD
THE
NATIONAL


SRI LANKA:
COUNTING THE DEAD PROJECT
Worldwide Initiative to Name and Count the Dead from Sri Lanka's War
ITJP
HRDAG
A decade after the end of the war in Sri Lanka in 2009, nobody knows the exact number and names of those killed in the war. The ITJP and the HRDAG appeal for help to collect the names of the dead to estimate the final death toll
HRDAG


SRI LANKA:
WAR ON
CIVILIANS
1.FLEEING
2.ATTACKED
3.HOSPITALS
4.FINAL DAYS
NATIONAL GALLERY







??????????? (NEWSREPORTER)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தொடர்போராட்டம் 2000 நாட்களை கடந்துள்ள நிலையில், அவர்களால் கையெழுத்திடப்பட்ட மனு ஒன்று பிரித்தானிய பிரதமர் அலுவகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான சர்வதேச நாளை நினைவு கூரும் வகையிலும், இலங்கையில்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கிலும், பிரித்தானியாவில் உள்ள பெரும்பாலான தமிழ் அமைப்புக்களும் ஒன்றிணைந்து, செவ்வாய்க்கிழமை (30 ஆகஸ்ட்) அன்று, லண்டன் ரவர்கார் சதுக்கத்தில் (Trafalgar Square) நடாத்திய மாபெரும் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த மனு கையளிப்பு இடம்பெற்றுள்ளது.

தாயகத்தில் பலவிதமான அச்சுறுத்தல்கள் துன்பங்களுக்கு மத்தியிலும் தளராது துணிந்து நின்று, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்காக நீதி வேண்டி, தொடர்ந்து போராடிவரும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகளை பிரிந்தானியாவுக்கு அழைத்து, அவர்களே நேரில் இந்த மனுவை பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், அவர்கள் பயணத்தில் ஏற்பட்ட தடங்கலால், அவர்கள் சார்பில் இந்த மனுவை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரித்தானியா வாழ் உறவுகள் இணைந்து சமர்ப்பித்துள்ளனர். லண்டனை தளமாக கொண்டு இயங்கும், இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையத்தினால் (ICPPG) இதனை வழிநடத்தியிருந்தது.

2009 ஆம் ஆண்டு இறுதியுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இராணுவத்திடம் கையளித்து காணாமலாக்கப்பட்ட மற்றும் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு மற்றும் பல்வேறு வகைகளிலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி 2000 நாட்களைக் கடந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் தொடர்ச்சியாக பலவேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போதிலும் இதுவரை அவர்களிற்கு உரிய நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட இம்மனுவில், போர்க்குற்றங்களில் ஈடுபட்ட அனைவரையும் சர்வதேச நீதிமன்றில் முன்னிறுத்தி உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும், தம் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமான சிங்கள் இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழ் மக்களிற்குரிய நிலங்களிலிருந்து உடனடியாக அகற்றப்படவேண்டுமெனவும், தமிழ் அரசியல் கைதிகளாக சிறையில் வாடும் உறவுகள் எந்த நிபந்தனையும் இல்லாமல் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும், தமிழ் மக்களிற்குரிய சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் மேலும் அதில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

Memo-Aug-12-2022_UKDownload




10